*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 328/2021***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-7 (LW-9)***

*Name / Father's Name:* ***திரு.ரமேஷ் த/பெ. பாலசுப்ரமணியன்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **08.03.2024.**

துவக்க நேரம் **11.05**

**முதல் விசாரணை**

நான் தற்போது தேக்கம்பட்டி புதூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் தேதி, மாதம் ஞாபகமில்லை. காலை நேரத்தில் நான் சின்னம்மாங்கோட்டில் உள்ள கோவிலுக்கு சென்றிருந்த போது அங்கே வந்த கருமந்துறை போலிசார் சண்டை நடந்தது சம்பந்தமாக விசாரித்து மாதிரி வரைபடம் வரைந்தார்கள். நேரில் வந்த விசாரணை செய்ததற்கு சாட்சியாக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2-வது கையெழுத்துக்கள் என்னுடையது தான். **(பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள 2 வது கையெழுத்துக்கள் மட்டும் அ.த.சா.ஆ.2 மற்றும் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

போலீசார் என் முன்பாக சம்பவயிடத்தில் இருந்து ஏதேனும் பொருளை கைப்பற்றினார்களா என்றால் கைப்பற்றவில்லை. நான் கையெழுத்து செய்ததாக சொல்லும் சம்பவயிடத்தின் அருகே வேறு குடியிருப்புகள் உள்ளது என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் கேட்டுக் கொண்டதால் கையெழுத்து செய்தேன்.

போலீசார் ஏற்கனவே எழுதி வைத்திருந்த பேப்பரில் தான் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் வைத்து எழுதாத வெள்ளை தாளில் கையெழுத்து செய்துவிட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 11.11

ஒம்/—S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.